


# மின் நுகர்வோர் துணைவன்

**MIN NUGARVOR THUNAIVAN**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய காலாண்டு செய்தி இதழ் — இலவசப் பிரதி

மலர் - 2, இதழ் - 4 — ஜுலை - செப்டம்பர் 2008

## மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்
## (State Co-ordination Forum's Meeting)



**திரு. எஸ். கபிலன்**, தலைவர், த.மி.ஒ. ஆணையம் மற்றும் ஆணையத்தின் உறுப்பினர்களான **திரு. பா. ஜெயராமன்**, **திரு. ஆர். இராஜ்பாண்டி** ஆகியோரின் தலைமையில் 25.06.2008 அன்று மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வளாகத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவற்றைப் பற்றி விவாதிப்பதற்காக நடந்தது.

தேசிய மின்சாரக் கொள்கைக்கு **(National Electricity Policy)** ஒத்தவாறு மாநில மின்சாரக் கொள்கை **(State Electricity Policy)** அமைவதற்கு யோசனை கூறுதல், அனைத்து மின்னிணைப்புக்களுக்கும் மின்னளவியை **(Metering)** நிறுவுவதற்காகத் திட்டமிடுதல், குறுக்கு உதவித் தொகையைப் **(Cross subsidy)** படிப்படியாக குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மின்சாரம் வழங்குவதில் பொது மக்களின் நலனைக் கருதும் அரசாங்கத்தின் கருத்துக்கள் மற்றும் மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதித்தல். தமிழ்நாடு மின்சார வாரியம் அதை நிறைவேற்றுவதற்காக குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்புவதற்கானப் பரிந்துரைகளைப் பற்றி விவாதித்தல்.

தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி **(Tamil Nadu Electricity Distribution Standards of Performance)** தரமான மின்சாரம் வழங்குதல் **(Quality supply)**, நுகர்வோர் திருப்தி **(Consumer satisfaction)** போன்றவற்றை நடைமுறைப்படுத்துதல்.

### மாநில மின்செலுத்தல் நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கான அவசரச் சட்டம்

மாண்புமிகு மின்துறை அமைச்சர் **திரு. ஆற்காடு என். வீராசாமி** அவர்கள் தமிழ்நாட்டில் மாநில மின்செலுத்தல் நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கான அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க உள்ளதாக அறிவித்துள்ளார். மின்சாரச் சட்டம் - 2003ன் சட்டப்பூர்வமானத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே இத்தகைய நிறுவனத்தை அமைக்க இருப்பதாக அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்வாரியத்தை சீரமைப்பதற்கான கெடு தேதி ஜுன் 9 அன்றுடன் முடிவடைவதால் அந்தக் காலக்கெடுவை மேலும் 45 நாட்களுக்கு நீட்டித்துள்ளதாக மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு தகவல் வந்துள்ளது.



**"தாமின் புறுவது உலகின் புறங்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்" - குறள் 399**

கல்வியிற் சிறந்த பெரியோர்கள் கற்கவேண்டியதைக் கற்று அறிய வேண்டியன அறிந்தவர்கள் தாம் பெற்ற அறிவின்பங்களை உலகிலுள்ள எல்லாரும் அடையும்படி பிறருக்கும் கொடுத்து மகிழ்வார்கள்.
**- பதவுரை**

## TNERC'S TARIFF ORDER NO. T.O. I-111, DATED 22-05-2008
## TARIFF TO TINY INDUSTRIES.

As per the Commission's **Tariff Order dated 15.3.2003**, **Low Tension III A (1)** is applicable to the Cottage and Tiny Industries, Small Gem Cutting Units, Sericulture and Floriculture, where the connected load does **not exceed 10 HP**.

**2)** Classification to Cottage and Tiny Industries was being made based on the following guidelines.

**(i)** The services (for the crafts) in the list of Cottage Industries (furnished by the Government) with a connected load not exceeding 10 HP were classified under the tariff without insisting for production of a certificate issued by the District Industries Center.

**(ii)** If the consumer produces Tiny Industries Certificate issued by the District Industries Center, such services with connected load not exceeding 10 HP are classified under this tariff.

**3)** The Industries Commissioner and Director of Industries and Commerce has intimated that, with the introduction of **Micro, Small and Medium Enterprises Development Act 2006 (Act No.27 of 2006)**, the process of SSI certificate registration has been dispensed with and SSI certificate is no more valid. He has also informed that the list of Cottage Industries has not been revised and the existing list would hold good.

**4)** Under the provisions of the MSME Act 2006, any person who intends to establish a micro or small enterprise shall file the Memorandum of Micro or Small Enterprises with District Industries Center and obtain **'Acknowledgement'.**

**5)** Some of the intending consumers represented that their applications for Tiny Industries under LT Tariff III A (1) and Industries under LT Tariff III B are not being considered by TNEB in the absence of SSI Certificate.

**6)** Under the above circumstances, with a view to remove difficulties to the intending consumers, clause (i) (relating to applicability under clause 7.0 Low Tension Tariff III A (1) in Part 2: (Low Tension Supply) of Tariff Schedule in Chapter 7.17 of the Tariff Order has therefore to be amended as below.

| Existing | As Amended |
|---|---|
| (i) The tariff is applicable to Cottage and Tiny Industries, Small gem cutting units, Sericulture and Floriculture, where the connected load does not exceed 10 HP. | The tariff is applicable to Cottage Industries, Micro enterprises engaged in the manufacture or production **of goods pertaining to any industry** specified in the First Schedule to Industries (Development and Regulations) Act 1951, Small gem cutting units, sericulture and floriculture, where the connected load does not exceed 10 HP. |

**7)** In exercise of the powers conferred under section 62 (1) of the Electricity Act 2003 (Central Act 36 of 2003), and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission issues the following amendments to the Tariff Order dated 15-03-2003 namely;

**NOTIFICATION**

In Tariff Order dated 15-03-2003, clause (i) (relating to applicability under clause 7.0 Low Tension Tariff III A (1) in Part 2: (Low Tension Supply) of Tariff Schedule in Chapter 7.17 is amended as below:

**"i) (a)** The tariff is applicable to cottage industries, micro enterprises engaged in the manufacture or production of goods pertaining to any industries specified in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951), Small gem cutting units, sericulture and floriculture where the connected load does not exceed 10 HP.

**(b)** The intending consumers applying for service connection under LT Tariff III A (1) claiming to have established the micro enterprise engaged in the manufacture or production of goods (with connected load not exceeding 10 HP) shall produce the acknowledgement issued by the District Industries Center under the Micro Small and Medium Enterprises Development Act, 2006 ( Act 27 of 2006 ) as proof for having filed Entrepreneurs Memorandum for setting up of Micro Enterprises for manufacture or production of goods with District Industries Center under whose jurisdiction the enterprise is located.

**(c)** The existing consumers who are classified under LT Tariff III A (1) based on the SSI /Tiny Industries Certificate may be continued to be charged under the same tariff till next tariff revision.

**(d)** The amendment shall come into force from the date of this order.

### இந்தியாவில் கார்பன் வரவுத் திட்டத்தின் பயன்பாடு வேகமாக வளர்ந்து வருகிறது
### (INDIA'S CARBON CREDIT MARKET GROWING FAST)

ரூபாய் 65 ஆயிரம் கோடி முதலீட்டில் 850 திட்டங்களை இந்தியா நிறைவேற்ற உள்ளதால், கார்பன் வரவுத் திட்டத்தின் பயன்பாடு அதிக வளர்ச்சி அடைய உள்ளதாக இருக்கிறது. உயிர்க்கூழம் (Bio-mass), நீர்மின் உற்பத்தி (Hydro power), காற்றாலை மின் உற்பத்தி (Wind power) மற்றும் இணைமின் உற்பத்தி (Co-generation) ஆகியவை அடங்கிய 220 திட்டங்களினால், இந்தியாவிற்கு கார்பன் வரவு திட்டப் பயன்பாட்டின் மூலம் 2012-ஆம் ஆண்டிற்குள் ரூபாய் 4 ஆயிரம் கோடி கிடைக்க உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## IN THE COURT HALL OF THE COMMISSION

***1. No review of Intra State Open Access Regulations - holds Commission***

In a petition filed by the Tamil Nadu Spinning Mills Association for review of Intra State Open Access Regulations, the Commission held such review falls outside the scope of section 94(1) (f) of the Electricity Act 2003 and dismissed the same.

***2. Petitions on carry over of accumulated units of energy-Commission grants relief to the wind mills***

In its order on a group of petitions filed for directing TNEB to carry over entire accumulated units found unutilized in the banking account of the petitioners during the year 2007-08 to the year 2008-09, the Commission gave directions to the effect that unutilized banked wind energy at the close of 2007-08 of all generators of windmill, whether commissioned prior to 15-5-2006, or after that, shall be permitted to be adjusted in the consumption of April, May, June 2008.

***3. Industrial tariff commences from the date of obtaining service connection-holds Commission***

In a petition filed for review of Order T.O 1-88, the Commission held that industrial tariff takes effect from the date of obtaining service connection.

***4. Review is possible only when there is mistake of fact or ignorance of any material fact or error apparent on the face of the record - holds commission***

Rejecting the plea of the **Indian Wind Power Association in R.P. No.1 of 2007** for review of tariff applicable for wind energy on grounds of revision in capital cost consumption, revision in interest rate assumption , Commission held that such factors are not valid reasons for review and they can be considered only at the time of next general revision of tariff.

***5. Colour Labs fall within the meaning of "Laboratories" - observes Commission***

In a petition filed by Sivanthi Colour Lab, it was held by the Commission that Colour Labs would fall within the meaning of " laboratories" and LT Tariff II-B would be applicable. The Commission delivered its decision after hearing the plea of the petitioner to classify it under LT Tariff III A (1)

## DOMESTIC CONSUMERS IN TAMIL NADU ARE THE LOWEST PAYERS COMPARED TO OTHER STATES

**Multi-year tariffs(MYT)** are now in place in Delhi, Madhya Pradesh, Orissa and Andhra Pradesh. All the regulators have also made a special reference to **time-of-day(ToD)** tariff to improve demand side management(DSM). An analysis of the existing tariffs in **23 states** (including those that have not announced tariffs for 2008-09) shows that while almost all the progressive states are attempting to reduce **cross subsidy** by bringing tariffs close to the cost to serve, in some states, industrial consumers continue to heavily cross-subsidise agricultural and domestic users. In five states- Uttar Pradesh, Maharashtra, Kerala, Jammu & Kashmir and Chhattisgarh some domestic consumers pay energy charges of less than **Re 1 per unit.** On the other hand, some domestic consumers in Andhra Pradesh, Kerala, Maharashtra and West Bengal pay variable charges more than **Rs.5 per unit**, the highest being paid in Maharashtra **(Rs.5.75 per unit).** In Tamil Nadu the electricity charges being paid by domestic consumers starts with a minimum of **65 paise per unit** upto **50 units bimonthly** and **75 paise per unit** upto **100 units bimonthly. Above 100 units,** it varies from **85 paise per unit** to **305 paise bimonthly.** This excludes the State Government's subsidy ranging from **35 paise to 170 paise.**

## Power position far better in Tamil Nadu compared to Northern and Western India

Despite an unusually pleasant May, the summer power shortage saga continues. With routine power cuts of four to 16 hours a day across northern and western India, summer 2008 has been no different from previous years. Overall, the country faced a deficit of **7,476 MUs (12.1 percent)** and a peak deficit of **17,889 MW (16.7 percent).** Region-wise, the western region, as always, fared the worst with the highest deficit of **4,593 MUs (20.4 percent).** The northern region followed at **1,479 MUs (9.9 percent)** and the southern region at **662 MUs (3.9 percent)**. The situation is assuming larger proportions and has started to take a toll, both on consumers and the economy. But the southern region is comparatively better off. During April 2008, Tamil Nadu faced a power deficit of **243 MUs (4.2 percent).**

*-Source : Powerline June 2008*

## SC upholds constitutional validity of Section 86 (1) (f) of the Electricity Act

In what could be termed as a far-reaching decision which has set at rest all the doubts with regard to the powers of a State Commission to adjudicate upon the disputes between the licensees and generating companies and to refer any dispute for arbitration, the Hon'ble Supreme Court of India has upheld the constitutional validity of section 86 (1) (f) of the Electricity Act 2003. Observing that a special law would override the general law, the Supreme Court set aside the judgment of the Gujarat High Court which appointed an arbitrator under the Arbitration and Conciliation Act 1996 in a dispute between Essar Power Ltd and Gujarat Urja Vikash Nigam Ltd. But it held that all other disputes (unless there is some provision in the Electricity Act 2003) could be decided in accordance with section 11 of the Arbitration and Conciliation Act 1996.

# தேசிய மின்சக்திச் சேமிப்பு தினம்
# (National Energy Conservation Day)

## தேசிய மின் ஆற்றல் திறன் இயக்கம் (National Energy Efficiency Movement)

தேசிய மின்சக்தி சேமிப்பு நாளைக் கொண்டாடும் இந்த விழாவில் பங்கேற்றுள்ள அனைவரும் தங்களுடைய உறைவிடத்திலாயினும், உழைப்பிடத்திலாயினும், விவசாயத்துறையிலாயினும், தொழில்துறையிலாயினும் மின்சக்தியை மிகவும் சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை நன்கு அறிந்திருப்பதோடு மட்டுமல்லாமல் அதை செயல்படுத்தவும் உறுதியாக இருக்கின்றீர்கள். இந்த விழாவில் பங்கேற்றுள்ளவர்கள் ஒவ்வொருவரும் மின்சக்தியை "சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டும், மேலும் மின்சக்தியைச் சேமிக்கவும் வேண்டும்" என்ற செய்தியை நம் நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் பரப்புவது நமது தலையாய கடமையாகும். தனிப்பட்ட நபர் ஒவ்வொருவரும், மின்சக்தியை சிறப்பான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பவர்களாக இருக்கும் ஒத்த கருத்துடையவர்கள் அனைவரையும் ஒரே அணியாகத் திரட்டி "தேசிய மின் ஆற்றல் திறன் இயக்கத்தை" தொடங்க வேண்டும்.

## மின் ஆற்றல் திறன் வாய்ந்த கருவிகளை உபயோகித்தல் (Use of Energy Efficient Equipments)

நாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு என்ற குறிக்கோளை அடைவதற்கு மின்சக்தி முக்கியப் பங்கை வகிக்கின்றது. அதிகரித்து வரும் மின்சக்தி தேவையைப் பூர்த்தி அடையச் செய்யும் சவாலான பணியை நாம் எதிர்நோக்கி உள்ளோம். சீரான மின்வழங்கலை அதிகப்படுத்துவது, கிடைக்கக்கூடிய மின்உற்பத்தி ஆதாரங்களை உகந்த முறையிலும் மற்றும் சிக்கனமான வகையிலும் பயன்படுத்துவது, மேலும் மின்தேவைப் பக்கத்தில் (Demand Side Management) மின்சக்தியைச் சேமிப்பது போன்ற முப்பரிமாணங்களைக் கொண்டது இந்த முயற்சியாகும். தொழில்நுட்ப முன்னேற்றம் இத்தகைய முயற்சிக்கு பெரும் பங்கை அளிக்கின்றது. தொழில்துறை மற்றும் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் மின் ஆற்றல் திறன் வாய்ந்தக் கருவிகளை உற்பத்தி செய்யவேண்டும். இதேபோன்று, அத்தகைய கருவியை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நிலையிலும் நுகரப்படும் மின்சக்தியின் அளவைக் குறைக்க வேண்டும்.

## தரமான மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்துதல் (Ensure quality supply)

மின்செலுத்துதலில் ஏற்படும் மின்னிழப்பு மற்றும் மின்திருட்டு போன்ற நிகழ்வுகள் அதிகளவில் இருப்பதால் நாம் சிறப்பான முறையில் மின்பகிர்வு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய பிரச்சனைகளை குடிமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.



மின்சக்தியை நெறிமுறைக்குட்பட்டுப் பயன்படுத்தவேண்டும் என்பதை நம்முடைய மக்கள் அறியச் செய்ய வேண்டும். விலைமதிப்பற்ற மின்சக்தியை வீணாக்காமல் இருப்பது அனைத்து குடிமக்களின் கடமையாகும். மின்சக்தியை அணுகுதல் மற்றும் மின்சக்தித் திறனை அதிகப்படுத்துதல் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. மின்சக்தித் திறனை வளர்த்தல், புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் பங்கினை அதிகரித்தல் மற்றும் எரிபொருள் கலவையை மாற்றுதல் ஆகியவற்றின் வாயிலாக, நாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சியை அடைவதே நமது கொள்கைகளாகும்.

## பசுமைக் குடில் வாயுக்களின் விளைவைக் குறைத்தல் (Reduce Green House Gas Effect)

மேலை நாடுகளில் உள்ள ஒவ்வொருவருக்கும் பசுமைக் குடில் வாயுக்களின் விளைவை இந்தியாவோடு ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது குறைவாகவே இருந்தாலும், இத்தகைய சூழ்நிலைகளில், உலகக் குடிமக்களாகிய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மின்சக்தி சிக்கனத்தை கடைப்பிடிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தனி நபர்கள், வியாபாரிகள், அரசு அலுவலகங்கள் மற்றும் கூட்டமைப்பு நிறுவனங்கள் தங்களது மின்நுகர்வில் அதிக கவனம் செலுத்தி வீணாகும் மின்சக்தியின் அளவைக் குறைக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். கட்டிடங்களில் மின்சாரச் சேமிப்பினைப் பலமடங்கு அதிகரிக்கச் செய்தல் வேண்டும்.

அனைவரும் மின்சக்தி திறன் வாய்ந்த கருவிகள் வாங்குவதை ஊக்குவிப்பதாலும், மின்சக்தி திறன் வாய்ந்த கட்டிடங்களில் குடியிருப்பதாலும் மேலும் அதில் பணியாற்றுவதாலும், நாம் நம்முடைய வாழ்க்கை முறைகளை நல்ல முறையில் அனுபவிப்பதற்கு ஏதுவாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பாரத குடியரசுத் தலைவர் திருமதி. பிரதீபா தேவிசிங் பாட்டீல் அவர்கள் 14.12.2007 அன்று தேசிய மின்சக்திச் சேமிப்பு தினவிழாவில் பேசிய உரைநடையின் ஒரு பகுதியின் தமிழாக்கம்)

**CENTRAL ELECTRICITY REGULATORY COMMISSION**

The Central Electricity Regulatory Commission has ordered Uttarpradesh Power Corporation Ltd (UPPCL) to clear principal arrears amounting to Rs. 7.68 billion for overdrawal of power from the grid. The arrears are to be paid in instalments of Rs. 1.28 billion over the period May to October 2008. Non-payment will result in curtailed power supply to the state.

# WIND ENERGY



Wind energy is a converted form of solar energy. Winds are caused by uneven heating of the earth's surface by the sun. Since, the earth's surface is made of very different types of land and water, it absorbs the sun's heat at different rates. Air has mass, and when it is in motion, it contains the energy of that motion **("Kinetic energy").** Some portion of that energy can be converted into other forms of mechanical force (or) electricity that we can use to perform work.

**2.0 Wind Turbine**




Fig (1)

A wind Turbine consist of a rotor, a generator and a tail mounted on a tubular frame. as shown in **fig (1).** Through the spinning blades, the rotor captures the kinetic energy of the wind and converts into rotary motion to drive the generator. The tail keeps the turbine facing into the wind. The output of a wind turbine depends on the turbine's size and the wind speed through the rotor. When the wind speed is 11 to 14 meters per second, rotor having 64 meter diameters will be able to generate electricity from 950 to 1250 Kilo watt. Wind turbines being manufactured now have power ratings ranging from **250 watts to 5 mega watts.**

**3.0 Role of Ministry of New and Renewable Energy (MNRE) sources for the Growth of Wind Power Industry in India.**

The broad aim of the ministry is to deploy new and renewable energy sources for supplementing the energy requirements of the country. The central

# காற்றுச் சக்தி

சூரியச் சக்தியின் மாற்று அமைப்பே காற்றுச் சக்தியாகும். பூமியின் மேற்பாகம் சூரியனால் சமமற்ற முறையில் சூடாக்கப்படுவதால் காற்று உருவாகிறது. பூமியினுடைய மேற்பாகம் நீர் மற்றும் நிலப்பரப்புக்களால் ஆனதால், இது சூரிய வெப்பத்தை மாறுபட்ட வீதத்தில் ஈர்க்கின்றது. காற்று பொருள் திணிவு உடையது. காற்று நகரும் போது, அது இயக்கச் சக்தியைக் **(உந்து சக்தி)** கொண்டதாக இருக்கும். அத்தகைய இயக்கச் சக்தியின் ஒரு பகுதி நம்முடையப் பயன்பாட்டிற்காக இயந்திர விசையாகவோ அல்லது மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவோ மாற்றப்படுகிறது.

**2. காற்றாலை**

**படம் (1)-ல்** காட்டியுள்ளதைப் போல, ஒரு சுழலி, மின்னாக்கி மற்றும் வால் பகுதி இவை அனைத்தும் ஒரு குழல் வடிவிலான சட்டத்தின் மீது பொருத்தப்பட்டவையே காற்றாலை எனப்படும். சுழலியின் இறக்கைகளால் காற்றின் இயக்க ஆற்றல் கவரப்பட்டு அதனை சுழல் விசையாக மாற்றி மின்னாக்கியை இயக்கச் செய்கிறது. வால்பகுதி சுழலியை காற்று வீசும் திசையை நோக்கி இருக்கச் செய்கிறது. காற்றாலையின் மின் உற்பத்தித் திறன், சுழலியின் விட்ட அளவைப் பொறுத்தும் காற்றின் வேகத்தைப் பொறுத்தும் அமையும். காற்றின் வேகம் வினாடிக்கு 11 மீட்டரிலிருந்து 14 மீட்டர் வரை இருக்கும் பட்சத்தில், 64 மீட்டர் விட்டம் கொண்ட சுழலியைப் பயன்படுத்தி சுமார் 950 முதல் 1250 கிலோ வாட் வரையில் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். மின் சக்தியின் அளவு 250 வாட்டிலிருந்து 5 மெகாவாட் வரை இருக்குமாறு காற்றலை தற்பொழுது உற்பத்தி செய்யப்படுகிறது.

**3. இந்தியாவில் காற்றாலை மின்உற்பத்தி தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் பங்கு.**

நாட்டினுடைய மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்த அமைச்சகம் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை வளர்ச்சியடையச் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதே இதன் பரந்த நோக்கமாகும். புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய அரசாங்கம் பல சலுகைகளை நிதியாகவும் மற்றும் நிதி சார்ந்த ஊக்கத் தொகையாகவும் அளித்து வருகிறது. மூலதன / வட்டிக்கான உதவித்தொகை, விரைவான தேய்மானம், முற்றிலும் அற்ற / சலுகை வடிவிலான சுங்கம் மற்றும் ஆயத்தீர்வைகள் இந்த நிதிசார்ந்த மற்றும் நிதிசார்ந்த ஊக்கத் தொகைகளில் அடங்கும். காற்றலை மின் உற்பத்தி செய்பவர்கள் பத்து வருடத்திற்கு வரி விடுமுறை என்ற பயன்பாட்டை அனுபவிக்கலாம். மேலும், அவர்கள் விற்பனை செய்யும் மின்சாரத்திற்கு வருமான வரியைச் செலுத்தவும் வேண்டாம்.

**4. காற்றுச் சக்தி தொழில்நுட்ப மையத்தின் பங்கு**

காற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான இடங்களை தேர்ந்தெடுக்கவும் மற்றும் அது தொடர்பாக ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் இந்திய அரசாங்கம் காற்றுச் சக்தி தொழில்நுட்ப மையத்தை நிறுவியுள்ளது. காற்றுவள ஆதாரங்களை மதிப்பீடு செய்யும் திட்டத்தை காற்றுச் சக்தி தொழில்நுட்ப மையம் மற்றும் மாநில தொடர்பு நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் ஒரு தொடர்பு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 41 இடங்களை

**சூரியச் சக்தியின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை வாங்குவதற்கான இடைக்கால கொள்முதல் விலை**

சூரிய போட்டோ வோல்டேக் மற்றும் சூரிய வெப்பச் சக்திகளின் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை தமிழ்நாட்டிலுள்ள மின்பகிர்வு உரிமம்தாரர்கள் வாங்குவதற்கான இடைக்கால கொள்முதல் விலை ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.15 என்று நிர்ணயித்து அதற்கான மின்கட்டண வீதத்தின் மீதான வரைவு ஆணையை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தங்களது இணைய தளத்தில் அனைத்துத் தரப்பினரின் கருத்துக் கேட்புக்காக வெளியிடப்பட்டுள்ளது.

Government has been providing several concessions in the form of fiscal and financial incentives to encourage the use of renewable sources of energy. These include capital/ interest subsidy, accelerated depreciation, nil/concessional excise and customs duties. Wind power generators now enjoy a ten year tax holiday and need not pay any income tax on power sales to utilities.

### 4.0 Centre for Wind Energy Technology (C-WET)

The Government of India has formed an organization called Centre for Wind Energy Technology (C-WET) to identify various locations for wind generation and other related research activities. Wind resource assessment programme is implemented by State Nodal agency and the C-WET. Tamil Nadu Energy Development Agency is acting as a Nodal agency for such projects in Tamil Nadu. C-WET has identified 41 locations in Tamil Nadu suitable for wind power generation.

### 5.0 Role of Indian Renewable Energy Development Agency (IREDA)

IREDA is responsible for promoting and financing private sector wind energy investments by conducting marketing campaigns, offering training, providing various types of credits and subsidies and offers other financial incentives.

### 6.0 Role of State Electricity Regulatory Commission:-

6.1 Section 61 of the Electricity Act requires the State Electricity Regulatory Commission to consider the promotion of co-generation and generation of electricity from renewable sources of energy as one of the guiding factors while determining tariff for renewable energy sector.

6.2 Section 86 (1) (e) of Electricity Act stipulates that the State Electricity Regulatory commission shall "promote co-generation and generation of electricity from renewable sources of energy by providing suitable measure for connectivity with the grid and sale of electricity to any person, also specify for purchase of electricity from such sources, a percentage of the total consumption of electricity in the area of Distribution Licensee.

### 7.0 Promotion of new and renewable sources of energy in Tamil Nadu

The Tamil Nadu Electricity Regulatory Commission in its Notification dated 08.02.2008 has issued a Regulations on **"Power Procurement from New and Renewable Energy Regulation-2008."** The promotion of New and Renewable Energy as stipulated in the Regulation are detailed as below.

காற்றாலை மின்உற்பத்திக்கு ஏற்ற இடம் என்று காற்றுச் சக்தி தொழில்நுட்ப மையம் அடையாளம் காட்டியுள்ளது.

### 5. இந்திய புதுப்பிக்கவல்ல எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் பங்கு

மின்சாரச் சந்தையில் பிரச்சாரம் செய்தல், பயிற்சி அளித்தல், பல்வேறு விதமான கடன்கள் மற்றும் உதவித்தொகை மேலும் நிதி சார்ந்த ஊக்கத்தொகை போன்றவற்றை அளித்து தனியார் காற்றாலை மின்உற்பத்தியில் முதலீடு செய்வதை மேம்படுத்துவதும் மேலும் அதற்கு நிதியுதவி அளிப்பதும் இந்திய புதுப்பிக்கவல்ல எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாகும்.

### 6. மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பங்கு

6.1 மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் மின்சாரத்திற்கான கட்டணங்களை நிர்ணயம் செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய தத்துவங்களைப் பற்றி மின்சாரச் சட்டப்பிரிவு 61-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, புதுப்பிக்கவல்ல எரிசக்தித்துறைக்கான மின்கட்டணங்களை நிர்ணயம் செய்யும் போது, இணைமின்னாக்கம் மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதை ஒரு வழிகாட்டுக் காரணியாக மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் தங்களது கருத்தில் கொள்ள வேண்டும்.

6.2 மின்சாரச் சட்டப்பிரிவு 86(1) (e)ன் படி மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் "இணைமின்னாக்கம் மற்றும் மரபு சாரா மின்உற்பத்தியை மின் கட்டமைப்பில் இணைப்பதற்கும், அந்த மின்சாரத்தைப் பொறுத்த அளவில் எந்த நபருக்கும் விற்பதற்கும் வகை செய்து கொடுப்பதுடன், அந்தப் பகுதி மின்பகிர்வு உரிமம்தாரர், மொத்த மின் பயனீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, இவ்வகையில் உற்பத்தி ஆகும் மின்சாரத்தை வாங்குவதற்கு வழி செய்து ஊக்குவிக்க வேண்டும்.

### 7. தமிழ்நாட்டில் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தல்

08.02.2008 தேதியிட்ட குறிப்பாணையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ''**புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான ஒழுங்குமுறை விதிகள்-2008ஐ**'' குறிப்பிட்டுள்ளது. ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவித்தலைப் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

(1) புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கிடைப்பதைப் பொறுத்து, ஒவ்வொரு மின்பகிர்வு உரிமம்தாரரும் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மின் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டிய மின்சக்தியின் அளவான குறைந்தபட்ச சதவீதத்தைப் பற்றி ஆணையம் அவ்வப்போது வெளியிடும் ஆணையில் குறிப்பிட வேண்டும். வரவிருக்கும் ஆண்டில் தாக்கல் செய்யப்படவுள்ள வருடாந்திர வருவாய்த் தேவைக்கான மனுவில் மின்பகிர்வு உரிமம்தாரர்கள், புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும் மற்றும் இணை மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படும் மின்சக்தியின் அளவினைப் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

(2) கரும்புச் சக்கை/உயிர்க்கூழம் ஆகியவற்றின் மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள், மின் உற்பத்தியைத்

**DELHI BUILDINGS SOON TO BECOME ENERGY EFFICIENT**

Within few years all buildings in Delhi would become energy efficient. Thanks to **ESCO (Energy Service Companies).** A US based MNC which did the retrofitting of Rashtrapathi Bhavan recovered 90% of its investment in just one year. Similarly in Prime Minister's office, it has started earning profit, besides nine Governments buildings and establishments have already been made energy efficient by private firms.

(1) The minimum percentage of electrical energy which each distribution licensee shall purchase from new and renewable sources generators shall be as stipulated in the Commission's order issued from time to time, subject to the availability of such power. The distribution licensee (TNEB) shall furnish the quantum of purchase of energy from new and renewable sources and cogeneration for the ensuing year in the **Annual Revenue Requirement (ARR)** filing.

(2) A maximum of **25% of conventional fuel** only is permitted to be used out of the total fuel used in a year, for start-up, stabilization and extended operational days in a year by the bagasse/biomass based generating plants.

(3) Evacuation facilities shall be provided by the **State Transmission Utility (STU) /Distribution licensee** as per the Commission's Intra State Open Access Regulations 2005, Central Electricity Authority (Technical Standards for connectivity to the Grid) Regulations, 2007 and Tamil Nadu Electricity Grid Code. The cost of interfacing lines, switch gear, metering, protection arrangement and related other equipments up to the interconnection point shall have to be borne by the generators, but the work shall be executed by STU / Distribution Licensee.

(4) The Commission may consider appropriate banking mechanism for generation of power from a particular kind of renewable source depending upon the inherent characteristics of such source.

(5) The Licensee shall provide adequate payment security mechanism to the generators for purchase of power.

**Conclusion:-**

India is currently ranked fourth in terms of installed wind power capacity, which stands at 8748.7MW (as on 31.3.2008). Tamil Nadu stands first in the wind energy generation, with a total installed capacity of 3873.4 MW. In Tamil Nadu the purchase rate of wind power for the WEG's commissioned before 15.5.2006 is Rs. 2.75 per unit at their option to come under revised agreement. The purchase rate for WEG's commissioned after 15.5.2006 is Rs. 2.90 per unit. Wind energy sector is considered to be having good potential for claiming Clean Development Mechanism (CDM) benefit under Kyoto Protocol due to zero emission.

துவக்குவதற்காகவும், மின் உற்பத்தியை நிலைப்படுவதற்காகவும் மற்றும் அதன் இயக்க நாட்களை நீட்டிப்பதற்காகவும் ஓர் ஆண்டில் பயன்படுத்தப்படும் மொத்த எரிபொருளின் அளவில் அதிகபட்சமாக 25 சதவீதம் வரை மரபு சார்ந்த எரிபொருளைப் பயன்படுத்துவதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(3) ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள மாநிலத்திற்குள் மின்சாரத்தை செலுத்தலுக்கான திறந்த அணுகுமுறைக்கான ஒழுங்குமுறை விதிகள், 2005, மத்திய மின்சாரக் குழுமத்தின் ஒழுங்குமுறை விதிகள், 2007 (மின் கட்டமைப்பில் இணைப்பதற்கான தொழில்நுட்பச் செந்தரங்கள்) மற்றும் தமிழ்நாடு மின்சாரக் கட்டமைப்பு விதித் தொகுப்பு ஆகியவற்றின்படி, மாநில மின் செலுத்தல் நிறுவனத்தால் / மின் பகிர்வு உரிமம்தாரரால் மின்சக்தியை வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். இடைத்தள மின் தொடர்கள், இணைப்பமைப்பு, மின் அளவி, பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் இடைஇணைப்பு முனையம் வரையிலுள்ள தொடர்புடைய பிற சாதனங்கள் ஆகியவற்றின் செலவுத் தொகை மின் உற்பத்தியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகையப் பணிகள் மாநில மின்செலுத்தல் நிறுவனத்தால்/மின்பகிர்வு உரிமம்தாரரால் செய்து முடிக்கப்பட வேண்டும்)

(4) புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்களின் உள்ளூரத் தன்மைகளைப் பொறுத்து குறிப்பிட்ட வகையான புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்காக வங்கியியல் இயங்கு முறையை ஆணையம் பரிசீலிக்கலாம்.

(5) புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி மின் உற்பத்தியாளர்களிடமிருந்து உரிமம்தாரர், மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்குப் போதிய செலுத்துகை உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

முடிவுரை:

காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா 8748.7 மெகாவாட் (31.03.2008 வரை) அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவி உலகிலேயே நான்காம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 3873.4 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவி இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில், 15.05.2006க்கு முன்பு நிறுவப்பட்ட காற்றாலை மின்உற்பத்தியின் உடன்படிக்கையை மாற்றியமைக்க விரும்பும்பட்சத்தில், மின்சாரத்தின் கொள்முதல் விலை யூனிட்டுக்கு ரூ.2.75 ஆகும். 15.05.2006க்குப் பிறகு நிறுவப்பட்ட காற்றாலை மின்உற்பத்தியிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் கொள்முதல் விலை யூனிட்டுக்கு ரூ.2.90 ஆகும். காற்றாலை மின் உற்பத்தியினால் எந்தவித மாசும் வெளியேற்றப் படாததால், கியோடோ புரோட்டோகால் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட சுற்றுப்புறச் சூழல் தூய்மை மேம்படுத்தும் திட்டப் பயன்பாட்டின் மூலம் காற்றாலைத் துறை அதிகப் பயன்பெறும் என்று கருதப்படுகிறது.

**Power Distribution Companies may be penalised for not buying minimum quantity of Green Power**

Power Distribution companies will now have to mandatory buy a minimum quantity of green power while purchasing power for their consumers. The idea behind the move is to see that every state includes some green power (Power generated from non conventional sources like wind power, solar power, bio gas) in their total power consumption for its consumers. Companies may be even penalised for not buying a minimum quantity of non-conventional power. At present, only 15 states including Tamil Nadu have set of quotas for sourcing renewable energy for their grids. The Centre and State Electricity Regulatory Commissions are both working to bring in the Regulations.

## SUPREME COURT ORDERS AT A GLANCE

**1) Indian Companies cannot seek International Commercial Arbitration**

Dismissing a plea by **TDM Infrastructure Private Ltd., Vs UE Development India Private Ltd.,(Arbitration Application No.2 of 2008)** for International Commercial Arbitration, the Supreme held that two Indian Companies locked in a dispute cannot seek ***international commercial arbitration***. It tantamounts to condoning the home country's law, it further held.

Once it is held that both the companies are incorporated in India, and, thus they have been domiciled in India, the arbitration agreement entered into by and between them would not be an international commercial arbitration agreement and, the question of applicability of **clause (iii) of section 2(1)(f) of Arbitration and Conciliation Act-1996** would not arise.

**2)** In an another judgment in **Civil Appeal Petition No. 1940 & 1941 of 2008(Gujarath Urja Vikash Nigam Ltd., Vs Essar Power Ltd.,)**, Supreme Court observed that *"after 10.06 2003 there can be no adjudication of dispute between licensees and generating companies by anyone other than the State Commission or the Arbitrator nominated by it. SC clarified that all disputes, and not merely those pertaining to matters referred to in* ***clauses (a) to (e) and (g) to (k) in section 86(1),*** *between the licensees and generating companies can only be resolved by the Commission or an arbitrator appointed by it. This is because there is no restriction in* ***section 86(1)(f)*** *about the nature of the dispute."*

## மின் நுகர்வோர் கேள்வி மேடை

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தங்களது இணைய தளத்தில் அமைத்துள்ள கேள்வி மேடையை சரியான முறையில் பயன்படுத்தி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் நுகர்வோர்கள் நேரிடையாக அவர்களுக்குத் தேவையான ஆணையத்தால் வெளியிட்ட விதித்தொகுப்பு தொடர்பான தகவல்களை மட்டும் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம். இதுவரை 83 மின்நுகர்வோர் பயனடைந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ELECTRICITY OMBUDSMAN

### *Order on curtailment of power by a Licensee is not an act beyond the control of a licensee-State Electricity Ombudsman*

In a petition filed by Tamil Nadu Spinning Mills for refund of excess amount of Monthly Minimum Charges , the question that came up before the Ombudsman was whether the respondent TNEB could charge more than 20% of the billable demand towards monthly minimum charges when there was frequent shut down of power caused on account of the directions of the licensee itself. Contending that only 20% of the billable demand can be charged, the petitioner placed reliance on the expression " any other occurrences beyond the control of the licensee" occurring in clause 6(b) of the Tamil Nadu Electricity Supply Code, which according to the petitioner, would include the power shut down ordered by TNEB. Holding that clause 6 (b) of the Supply Code has to be read in conjunction with clause 38 of the Distribution Code and clause 7 (4) of the Grid Code, the Ombudsman has upheld the right of the licensee to give directions for curtailment of power usage and rejected the prayer for refund.

**நுகர்வோர் நல அலுவலகம்,**
**தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்,**
நெ.17, 3வது பிரதான சாலை, சீத்தம்மாள் காலனி,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.
தொ.பே.எண். : +91-044-24359156 / 24359215 / 24322037
தொ. நகல் : 044-24354982
மின் அஞ்சல் : tnerc@vsnl.net
இணைய தளம் : www.tnerc.gov.in

**To**

Published by **Mr. R. BALASUBRAMANIAN,** Secretary, on behalf of **TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION** and published from No.17, 3rd Main Road, Seethammal Colony, Alwarpet, Chennai - 600 018 and printed by Thirumathi. **R. LEELA** at **M/s. R.S. GRAPHICS,** No.105, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034.

Editor : **Er. C. VEERAMANI, M.E., M.B.A.,** Deputy Director (Engg.), Consumer Advocacy Wing, Tamil Nadu Electricity Regulatory Commission.